[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1990 மார்ச் 28

முதல் நாள் கூறிய கருத்துக்களில் மதுவிலக்கு அர்த்தம் அற்றது, மலிவு விலைச் சாராயம் வரவேற்கத்தக்கது என்றோ நான் கூறவில்லை. சில பத்திரிகைகள் மலிவு விலைச் சாராய அறிமுகத்தை நான் வரவேற்பதாக தலைப்பைத் தந்துள்ளன. நான் பேசுகின்றபோது, ஏழைகள் ஏழைகளாக இருக்கின்ற நிலையில் அவர்களுடைய பணம் மதுக் கடைகளுக்குச் சென்று விடக் கூடாது என்ற அடிப்படையில் தான் காங்கிரசினுடைய பொருளாதாரப் பார்வையோடு இக்கொள்கை அமைந்துள்ளது : காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கை என்ன என்பதையும் சுட்டிக் காட்டி, ஆனால் மதுவிலக்கு கோஷம், நாடு முழுவதும், காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் உட்பட செயலிழந்து உள்ளது என்கின்ற யதார்த்த நிலையையும் எடுத்துக் கூறினேன். ராஜாஜி அவர்கள் உங்கள் வீட்டிற்கு வந்த பொழுது, நீங்கள் ஏற்றிருந்தால் இன்று வரை தொடர்ந்து இருக்கும் என்றும் குறிப்பிட்டேன்.

அதற்கு மேலும் ஒரு constructive opposition என்ற முறையிலே என்னுடைய ஆலோசனைகளை தருகிறேன் என்று சொல்லி, மலிவு விலை மதுவின் மீது 25 சதவீத வரி இருப்பதை நீங்கள் குறைத்தால்தான் அது மலிவு விலை மதுவாக இருக்கும் என்பதையும் சொன்னேன். இல்லையென்றால், கள்ளச்சாராயம் வரும் என்றும் குறிப்பிட்டேன். மேலும், தாய்மார்கள் திட்டினாலும் கூட, அரசு பணம் பண்ண வேண்டுமென்று விரும்பினால் இவ்வாறு பண்ணுங்கள் என்று கூறி, ஐ.எம்.எஃப்.எஸ். இருக்கிறது ; மலிவு விலை மது இருக்கிறது ; அதனால் கள்ளுக் கடைகளை நீங்கள் நடத்தவில்லையென்றால் யாராவது நடத்தி பணம் சம்பாதிப்பார்கள்; அந்த ரூ. 50 கோடியை நீங்கள் வீணாக விடாதீர்கள் ; அதை வேண்டுமானாலும் நடத்துங்கள். ''வேண்டுமானாலும் நடத்துங்கள்'' என்று தான் குறிப்பிட்டேன். அதை less injuries to health என்றும் குறிப்பிட்டேன். மேலும் நல்ல, வலுவான பிரச்சாரங்கள் மூலமாகத்தான் மதுவிலக்கைக் கொண்டு வர முடியும் ; மதுவை முறியடிக்க முடியும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறேன்.

மேலும் அடுத்த நாள் மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் பேசியபோது, மகாத்மா காந்தி அவர்களை இணைத்துப் பேசுவதை, இன்றைக்கு அவர்கள் இருந்தாலும் போர்பந்தரிலே நடந்த காரியங்களையெல்லாம் பார்த்து ஒரு துயறுருகின்ற கன்றை, மரணத்துக்குப் போராடுகின்ற கன்றைக் கொன்று விடுவார்கள் என்ற அடிப்படையில் அவர்களும் தளர்த்தி இருப்பார்களா என்று கேட்டார்கள். அதனால், மகாத்மா காந்தி அவர்களை இழுத்துப் பேசக் கூடாது, காரணம் ''determined thinking'' என்ற அடிப்படையில் அன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்பத்தான் அவர்கள் இருந்து இருப்பார்கள். அவர்கள் இந்த நாட்டின் தந்தை என்ற அடிப்படையில் அவர்களை இழுக்கக் கூடாது என்று சொல்லி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவும் நான் அன்றைக்குக் கேட்டுக் கொண்டேன்.

1990 மார்ச் 28] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

மேலும் அண்ணா அவர்கள் இருந்தால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்தால், மகாத்மா காந்தி அவர்கள் இருந்தால் இன்றைக்கு எதை எடுத்து இருப்பார்கள் என்றெல்லாம் பேசுவதை விட அவர்களெல்லாம் நிச்சயமாக மதுவிலக்குக்கு எதிரானவர்கள், அவர்கள் இன்றைக்கு they will turn in their graves என்று குறிப்பிட்டேன். அவர்களை இணைத்துத்தான் பேசக்கூடாது என்று சொன்னேனேயொழிய, யதார்த்தங்களின் அடிப்படையில் என்னுடைய கருத்துக்கள் நான் சொன்னவைகளாகத்தான் இருக்கின்றன.

அதற்கு என்னுடைய நிலைமைகளை மாற்றிக் கொண்டேன் என்று சில பத்திரிகைகள் எழுதுகின்றன. வாடிக்கையாக அப்படி எழுதுகின்ற பத்திரிகைகளாக இருந்தால் நான் அவர்கள் மீது ஒரு உரிமை மீறலைக் கூட தந்திருக்க முடியும். அவர்கள் அப்படி வாடிக்கையாக, ஒரு உறுப்பினருடைய உரிமைகள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றவர்களாக இருந்தால் நான் அதைச் செய்திருப்பேன். அவ்வாறு நான் செய்யவில்லை என்பதையும் இந்த நேரத்தில் சொல்லி, என்னுடைய நிலைமை, நான் அன்றைக்கும் இதைத்தான் சொல்லியிருக்கிறேன். மதுவிலக்கு ஒரு புனிதமான கொள்கைதான். அது நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு கொள்கைதான். ஆனால் அது வலுவிழந்திருக்கிறது என்பது யதார்த்தம், உண்மை, அது கசப்பான உண்மை என்பதைத்தான் நான் அன்றைக்கும் சுட்டிக் காட்டியிருக்கிறேன். எந்தவொரு கொள்கையும், கோட்பாடும் புனிதமானதாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அது அனுசரிக்கப்படுவதிலேதான் அதன் புனிதம், மேன்மை எல்லாமே இருக்கிறதேயொழிய மீறப்படுவதில் அதனுடைய புனிதம், மேன்மைகளெல்லாம் இல்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லி இன்றைக்கு இருக்கிற ஆளுங்கட்சி, தன்னுடைய சமூக பொருளாதார இக்கட்டுகள், அதிலும் இன்றைக்கு ஒரு புதிய விளக்கத்தை பட்ஜெட்டிலே தந்திருக்கிறார்கள்; ஆளுவோருக்கும் ஆளுவோரைச் சார்ந்தவர்களுக்கும் போதும் என்ற மன உபதேசம் பொருந்தாது என்று. அந்தப் பொருளாதாரப் பார்வையில் இருக்கின்ற இந்த அரசு, மேலும் ராஜாஜி அவர்கள் வந்தபொழுதே அந்த நிலைமையை அன்றைக்கு விடவில்லை என்று நான் சொல்லி இருக்கிறேன். அந்த நிலைமையில் இருக்கின்ற அரசுக்கு நான் எந்த அறிவுரைகளைத் தரமுடியுமோ அதனைத்தான் நான் ஒரு constructive opposition என்ற முறையில் தந்திருக்கிறேன்.

இறுதியாக நான் சொல்வது, 'மாவோ' யுத்தத்தைப் பற்றி, "We are advocates of abolition of war. We do not want war. But, to end war, we want war." என்று சொன்னார். அந்த அடிப்படையில்தான் நானும் செல்கிறேன், we are advocates of abolition of alcohol. We do not want alcohol.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கொடுப்பதற்கு தாங்கள் அனுமதி கொடுத்தீர்கள். மீண்டும் ஒரு பேச்சு, பிரச்சாரம் செய்வதற்கு அனுமதித்தீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்து விட்டு உட்காரலாம். (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கோ. பூவராகன் : On a point of order ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒன்றும் 'point of order' இல்லை.
நீங்கள் உட்காருங்கள்.

Thiru P. V. RAJENDRAN : We are advocates of abolition of alcohol. We do not want alcohol. But, to end spurious alcohol, I suggested better alcohol,

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91— பொது விவாதம்— தொடர்ச்சி.

9.25 மணி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது, காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்கள் ஏற்கெனவே சொன்னதைத் தவிர, அவற்றிலும் சிலவற்றை உள்ளடக்கி, கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களையும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க் கட்சிகளுடைய பணி என்பது, நேரம் குறைவாக இருக்கிற காரணத்தினாலே மட்டும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதோ, செய்யாதவைகளை ஏன் செய்யவில்லை என்று தட்டிக் கேட்பதோ ஆகத்தான் இருக்கும். எனவே காதுகளுக்குச் சுவை அளிப்பதாக நான் இங்கே சொல்லாமல், ஆளுகின்றவர்களுடைய கைகளுக்குச் சுமை தருவதாகத்தான் சில செய்திகளை நான் இங்கே சொல்ல முடியும். அவ்வளவுதான் நேரம் இருக்கிறது எனக்கு.

செவி கைப்ப சொற்பொறுக்கும் வேந்தராக இருந்து, நான் இங்கே இடித்துச் சொல்கிற பழைய காலத்துப் புலவரைப் போலவே அவ்வளவு உரிமை எனக்கு இல்லை என்று சொன்னாலும், அந்த வழியில் வந்த ஒரு மாணவன் என்ற வகையில், அவர்கள் அவற்றைக் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டு

1990 மார்ச் 28] [திரு. குமரி அனந்தன்]

மென்ற முன்னுரையோடும், சொல்கிற பல கருத்துக்களின் ஒவ்வொரு கருத்தையும் முதல்வர் அவர்கள் கருத்தில் கொண்டு அவை ஒவ்வொன்றுக்குமே விடை தருவதாக அவர்கள் பதில் அமையும் என்ற நம்பிக்கையில் சில கருத்துக்களையும் செய்திகளையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நீங்கள் இங்கே படைக்கின்ற நேரத்தில், அன்று நிலவிய சூழ்நிலையை விட, இப்போது இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தைப் படைக்கிறபோது, இந்திய அரசியலிலும், தமிழ்நாட்டு அரசியலிலேயும் கூட சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்ல வேண்டும். கடந்த ஆண்டு நீங்கள் வரவு-செலவுத் திட்டத்தைப் படைத்த போது, துறைமுகம் தொகுதியில் நின்று, எதிர்த்து நின்றவர்களையெல்லாம் வென்று 31,991 வாக்குகளைப் பெற்று மேடையிலே நின்று பேசுவதைப் போல தெரிவித்தீர்கள். ஒரு பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பின்னால், இப்போது அதே துறைமுகம் தொகுதியில் 31,991 ஓட்டுக்களையும் சரி செய்து சமன் செய்ததோடு மட்டுமல்லாமல், அதற்கும் மேலே 34,140 வாக்குகளை அதிகம் பெற்று உங்களுக்கு எதிராக நின்ற வேட்பாளர் வெற்றி பெறுகிற அந்தச் சூழ்நிலையில், மேட்டிலே நின்று பேசிய அந்த பட்ஜெட் உரைக்குப் பின்னால், இப்போது நீங்கள் பள்ளத்தில் நின்று பேசுகிறீர்களே என்று சொல்கிற எண்ணம் என்னுடைய உள்ளத்தில் எழுவதற்குக் காரணம், நாங்கள் 75 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம் என்று நீங்கள் சொன்னதை மக்கள் நம்பவில்லை என்பது மட்டுமல்ல, மக்கள் கண் கூடாகக் காணவில்லை என்பதும், இதற்கு ஒரு சான்றாக அமைகின்றது.

மத்தியில் கூட்டாட்சி என்றும், நீங்கள் உரிமைக்குக் குரல் கொடுப்பவர்கள் என்றும் சொல்கிற வகையில், இந்த பட்ஜெட்டில் பல்வேறு இடங்களில் நீங்கள் மத்திய அரசைக் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறீர்கள். உதாரணமாக, மாநில சுயாட்சி என்பதனை, 1968 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே, பெருமதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்கிற போது சொன்னார்கள். ''மாநிலங்கள், தேவையான அதிகாரங்களை எல்லாம் எடுத்துக் கொள்ளட்டும், பின்னால் மாநிலங்கள் விரும்பித் தருகிற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும், மேலதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான், மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.'' இது 1968-ல் பேரறிஞர் அண்ணா பேசியது. அடுத்து நீங்கள், 1975 மார்ச் மாதத்தில், பேசியது. ''வரம் கொடுக்கும் தெய்வமாக மத்திய அரசும் தவம் கிடக்கும் பக்தனாக மாநில அரசுகளும் இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப் பெற்றுத்தான், காரியங்கள் செய்ய வேண்டும்'' என்று நீங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள்.